1182



PROGRESSIVE STORIES

BOOK I

C. KESAVARAMANJULU NAIDU & CO.,
EDUCATIONAL PUBLISHERS,
MADRAS.

TB
031,3(5)
N32
85160

No.
SEP 1962

முன்னேற்றக் கதைகள்

முன்னேற்றக் கதைகள்

(முதற் புத்தகம்)

சி. கேசவராமாநுஜுலு நாயுடு & கோ.,
விநாயக மேஸ்திரி தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை.

பதிப்புரிமை] [விலை அணா 4.

85160

TB
O-13(5)
N32

பொருளடக்கம்

எண்	விஷயம்		பக்கம்
1.	உழைப்பால் உயர்வடைந்தேன்	....	3
2.	டாக்டர் நாயர்	....	5
3.	மன்னுயிர் காத்த வீரர்	....	7
4.	கடவுளின் நாமத்தால் வெல்வேன்	....	9
5.	மெழுகால் ஆன சிங்கம்	....	12
6.	நாயும் அல்லி மலரும்	....	14
7.	நாட்டிற்காக உயிரையும் விடுவேன்	....	16
8.	நாயின் வீரச் செயல்	....	19
9.	அறம் வளர்த்த அண்ணல்	....	21
10.	சக்கிலியின் சிறந்த அன்பு	....	23
11.	குலத்தைக் கெடுத்த கோ	....	25
12.	செய்ந்நன்றி மறவேன்	....	28
13.	பெற்ற தாயினும் பெரிய தாய்	....	30
14.	உயிரினும் நண்பனே சிறந்தோன்	....	33
15.	மானம் பெரிதா? உயிர் பெரிதா?	....	36
16.	வீரத்தாய்	....	38
17.	உன் வேலையைச் செய்ய வெட்கம் ஏன்?		41
18.	இராபர்ட் பர்ன்ஸும் வயல் எலியும்	....	43
19.	அனைவரும் ஒன்றே	....	45
20.	இராணி - துர்க்காவதி	....	48
21.	காலந் தவறாமை	....	50
22.	அரசியின் அருங்குணம்	....	53
23.	இடைச்சி - இந்திராணி	....	55
24.	கொய்யாப்பழச் சிறுவன்	....	58
25.	நாம் கடவுளின் மக்கள் அல்லவா?		62

3171

முகவுரை

'முன்னேற்றக் கதைகள்' என்னும் பெயர் பெற்ற இந்நூல், இளமாணவ மாணவிகட்குப் பெரிதும் இன்பத்தையும் உற்சாகத்தையும் உண்டு பண்ணத் தக்கது. இந்நூலில், மாணவ மாணவிகட்குத் தமிழ்ச் சுவையையும், ஒழுக்க முறையையும், வீரத்தையும், நாட்டுப் பற்றையும் ஒருங்கே உண்டாக்க வல்ல அரிய கதைகள் பல, புதிய முறையில் எழுதப்பட்டிருக்கின்றன.

இளைஞருலகம் இதனை ஆர்வத்துடன் நல்வரவேற்கும் என்னும் துணிபுடையேம்.

வெளியிடுவோர்.

ஸர் - தி. முத்துசாமி ஐயர்

No.

இனிய கதைகள்

1. உழைப்பால் உயர்வடைந்தேன்

பிள்ளைகளே !

என் பெயர் தி. முத்துசாமி ஐயர் என்று யாவரும் கூறுவர். நான் தென் நாட்டில் திருவாரூருக்கு அருகில் உள்ள உச்சுவாடி என்ற கிராமத்தில் எளிய பிராமண-குடும்பத்தில் 1832-ஆம் வருடம் பிறந்தேன். நான் சிறுவனு யிருந்தபோதே என் தந்தையார் இறந்தார். என் அருமைத் தாயார் என்னை அன்போடு வளர்த்து வந்தார்.

நான் மிகவும் ஏழையானதால் அதிகம் படிக்கக் கூடவில்லை. உணவுக்கே கஷ்டப்பட வேண்டியதாயிற்று. மாதம் ஒரு ரூபாய்-சம்பளத்திற்கு ஒரு கணக்கரிடம் வேலை பார்த்து வந்தேன். சில வருடங்களில் என் தாயாரும் காலமானுர்.

நான் இருந்த திருவாரூருக்குத் தாசில்தார் வந்தார். அவர் என்னுடைய சுறுசுறுப்

பையும் வேலை பார்க்கும் திறமையையும் கண்டார்; எனக்கு உயர்தர கல்வி ஊட்ட விரும்பினார். உடனே அப்புண்ணியர் என்னை நாகப்பட்டினத்திற்கு அனுப்பி, இலவசமாகக் கல்வி கற்கச் செய்தார். நான் நன்றாய்ப் படித்து உயர் வகுப்புக்களை யடைந்தேன். பின்னர், அப்பெரியாரது சிபாரிசால், சென்னைச் சர்க்கார் கலாசாலை யில் சேர்ந்து படித்தேன். அங்கும் நன்றாகப் படித்துப் பரீட்சையில் தேறி, 500 ரூபாய் பெறத்தக்க பரிசும் பெற்றேன்.

பின்னர், நான் சட்டப் பரீட்சையில் முதல்வனாகத் தேறினேன். அப்போது நான் கலெக்டர் ஆபீஸ் குமஸ்தாவாக இருந்தேன். பரீட்சையில் தேறியதும், நான் தரங்கம்பாடி முனிசிப்பாக நியமிக்கப் பட்டேன்; பின்னர், டெபுடி கலெக்டரா னேன். ஆங்கில அறிஞரான நார்ட்டன் பெரியாரும் வழக்கை விசாரித்துத் தீர்ப்புக் கூறும் என் நுண்ணறிவை வியந்து கொண் டாடினர்.

என் பெயரும் புகழும் அரசாங்கத்தா ருக்கு எட்ட, அவர்கள் என்னைச் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக்கினார்கள். ஹைக்கோர்ட்டு நீதிபதியாக நியமிக்கப் பட்ட முதல் இந்தியன் நானே. சில ஆண்டு

கட்குப் பின்னர்ச் சர்க்கார் 'ஸர்' என்னும் பட்டத்தை யளித்து என்னைக் கௌரவப் படுத்தினர்.

அன்புள்ள பிள்ளைகளே, என் ஆரம்ப வாழ்க்கையையும் இறுதிப் பதவியையும் கண்டீர்கள் அல்லவா? நான் உயர்வடைந் ததற்குக் காரணம் என்ன? உழைப்பு! உழைப்பு!! உழைப்பே உயர்வளிக்கும். நீங்கள் என்னைப் போல மனஞ் சலிக்காது, உழைத்து உயர்வடைய வேண்டும்.

2. டாக்டர் நாயர்

தென் நாட்டில் ஜஸ்டிஸ் கட்சியை நிலை நாட்டி, மக்களுக்குள் ஒற்றுமையை யுண்டாக்கிய பெரியார் இருவர். அவர் களில் டாக்டர் நாயர் ஒருவராவர். அவர் முழுப் பெயர் தாரவார்த் மாதவ நாயர் என்பது. அவர் தென் மலையாளத்தில் உள்ள பாலக்காடு என்ற ஊரில் 1868-ஆம் வருடம் ஜனவரி மாதம் 15-ஆம் தேதி பிறந்தார்.

சிறுவரா யிருந்தபோதே நாயர் சிறந்த அறிவுள்ளவராக விளங்கினர். அவர் பாலக் காடு அரசாங்கக் கலாசாலையில் படித்தார்; பின்னர்ச் சென்னை மாகாணக் கல்லூரியில்

சேர்ந்து படித்தார்; அதன் பிறகு மருத்துவக் கல்லூரியிற் படித்துப் பட்டம் பெற்ருர். பின்னர், அவர் 1889-ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்று ஏழு வருடகாலம் வைத்தியத்தில் பழகித் தேர்ச்சியடைந்தார்.

மருத்துவத் தொழிலை நன்ருய்க் கற்கும்பொருட்டுப் பிரான்சு தேசத்தின் தலைநகரான பாரிசுக்குச் சென்ருர்; மருத்துவத் தொழிலில் தேர்ச்சியடைந்தார்; 1897-ஆம் ஆண்டில் இந்தியாவுக்குத்திரும்பி,சென்னையில் தங்கினர். வைத்திய முறையில் நாயர் பெரும் புகழ் பெற்ருர். சென்னை மாகாணத்தார் அவரைத் தெய்வமாகப் போற்றினர்.

நாயர் பரந்த அறிவுடையவர். ஏழைகளையும் பணக்காரர்களையும் அவர் ஒன்ருகவே எண்ணி வந்தார்; தாழ்த்தப்பட்ட சாதியாரை முன்னுக்குக் கொண்டுவந்தார். 'அனைவரும் தாய் நாட்டுச் சகோதரரே; ஆதலால், சாதி வேற்றுமைகளைக் கவனிக்காமல் யாவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்' என்பன நாயரின் சிறந்த நோக்கங்களாகும். இந்நோக்கங்கள் கொண்ட கட்சியே ஜஸ்டிஸ் கட்சி (நியாயக் கட்சி) என்பது. இத்துறையில் நாயருக்குப் பேருதவியாக இருந்த பெரியார் சர். பி. தியாகராய செட்டியார் என்பவராவர்.

ஏழை மக்களுக்குப் பாடுபடுவதே நாயரது சிறந்த குணமாகும். அவர் ஏழைகள் நன்மைக்காக அரசாங்கத்தாரிடம் வாதாடினார்; தாம் கொண்ட வேலையில் தம்மை யாவரும் பெருமைப் படுத்தும்படி நடந்து கொண்டார்.

முடிவாக நாயர் இங்கிலாந்து சென்றார்; அங்குள்ள பாராளும் மன்றத்தில் இந்தியர் நிலையையும், அவர்களை முன்னுக்குக் கொண்டுவரத் தக்க வழிகளையும் தெளிவாக எடுத்துப் பேசினார். அவர் அங்கு இருக்கையில் திடீரென 1911-ஆம் ஆண்டு சூலை மாதம் 19-ஆம் தேதி காலமானார். அவர் பிரிவை எண்ணி வருந்தாத இந்தியன் இல்லை என்றால், டாக்டர் நாயரது பெருமையை என்னென்பது!

3. மன்னுயிர் காத்த வீரர்

ஸர். பிலிப் சிட்னி என்பவர் சிறந்த போர் வீரர். அவர் போரில் பெயர் பெற்றவர்; நன்றாகப் போர் செய்பவர். அவர் ஒரு சேனையில் வீரராக இருந்தார். அச்சேனை பகைவர் சேனையோடு ஒரு முறை சண்டையிட்டது.

அச் சண்டையில் சிட்னி வீரத்தோடு போர் செய்தார் ; பல காயங்களை அடைந் தார் ; களைத்துக் கீழே விழுந்தார். இன்னும் பல வீரர்கள் அவர் பக்கத்திலே விழுந்து கிடந்தார்கள்.

சிட்னி தாகத்தால் வருந்தினுர். சண்டை நடந்த விடத்தில் தண்ணீர் ஏது ? அவர் 'தண்ணீர், தண்ணீர்' என்று கத்தி ஞர். அவர் தோழர்கள் வெகுதூரம் அலைந்து திரிந்து, ஒரு பாத்திரத்தில் சிறிது தண்ணீர் கொண்டுவந்தார்கள்.

சிட்னி அப் பாத்திரத்தைப் பேராவ லோடு வாங்கினுர் ; அதன் உள்ளிருந்த தண்ணீரைப் பார்த்தார். அவர் கண்கள் மலர்ந்தன ; அவர் முகமும் மலர்ந்தது. அவர் அதிக சந்தோஷப்பட்டார். அந் நீரைக் குடிக்கப் பாத்திரத்தை வாயினருகில் தூக்கினுர்.

அப்போது அவருக்கு அருகில் ஒரு போர் வீரன் விழுந்து கிடந்தான். அவ னும் சிட்னியைப் போலவே காயம்பட்டு வீழ்ந்தவன். அவனும் நீர் வேட்கையால் தவித்துக்கொண்டு இருந்தான். சிட்னி தண்ணீர் குடிக்கப் போவதைக் கண்டான். அவன் கண்கள் தண்ணீர் இருந்த பாத்தி ரத்தை ஆவலோடு பார்த்தன.

சிட்னி அவனை உற்று நோக்கினார். அவனும் தன்னைப் போலத் தாகத்தால் வருந்துபவன் என்பதை உணர்ந்தார். "எனக்கு இருக்கும் தாகத்தை விட இவ் வீரனுடைய தாகம் அதிகமாக இருக்கிறது போலும். பாவம்! ஆதலால், இந்த நீரை இவனே குடிக்கட்டும்" என்று சொல்லிக் கொண்டே, தன் கையில் இருந்த பாத்தி ரத்தை அவ் வீரனுக்குக் கொடுத்தார்.

அடுத்த விநாடி, சிட்னி தாகக் களைப் பால் தரையில் விழுந்தார்; உயிர் துறந்தார். தாகத்தால் உயிர் போகும் நிலையில் இருந்த அவர், தன்னுயிரையும் பொருட்படுத்தாமல் மற்றோர் உயிரைத் தன்னிலும் மேலாகக் கருதினார்; ஆதலால், தான் குடிக்க இருந்த நீரை அவனுக்குத் தந்தார். தான் நீர் வேட்கையால் இறந்தார். இவர் மன்னுயிர் காத்த வீரர் அல்லவா?

4. கடவுளின் நாமத்தால் வெல்வேன்

முன் காலத்தில் இஸ்ரவேல் கூட்டத் தார்க்கும் பெலஸ்தியர்க்கும் சண்டை நடந் தது. பெலஸ்தியர் சேனையில் கோலி யாத்து என்ற பெரிய வீரன் ஒருவன் இருந் தான். அவனைக் கண்ட இஸ்ரவேல் கூட்

டத்தார் நடுங்கினர்கள். அவனோடு சண்டை செய்யக் கூடியவர் இஸ்ரவேல் கூட்டத்தாருள் ஒருவரும் இல்லை.

இஸ்ரவேல் கூட்டத்தாருள் ஒரு கிழவன் இருந்தான். அவனுக்கு எட்டுப் பிள்ளை

கள் இருந்தார்கள். அவர்களில் மூன்றுபேர் சண்டையில் இருந்தார்கள். தாவீது என்பவன் எட்டாவது பிள்ளை. அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டு இருந்தான். அவன் கடவுளை எப்போதும் தொழுது வந்தான்.

கடவுளும் அவன்மீது அன்புகொண்டிருந்தார்.

ஒருநாள் தாவீது சண்டையில் கலந்து இருந்த தன் சகோதரர்களைப் பார்க்கப் போனான். அப்போது, கோலியாத்து வழக்கம் போல வெளியில் வந்தான். "பகைவர்களே! உங்களில் எவனாவது என்னோடு சண்டை செய்ய வரலாம்" என்று உறுமினான். அவனைக் கண்ட இஸ்ரவேல் கூட்டத்தார் பயந்து நடுங்கினார்கள்.

தாவீது கோலியாத்துக் கூறியதைக் கேட்டான். அவனுக்குக் கோபம் உண்டானது. "கடவுளின் பரிசுத்த நாமத்தால் நான் இந்தப் பெரிய வீரனை வெல்வேன்" என்றான். இஸ்ரவேல் கூட்டத்தாரின் அரசனும் விடை தந்தான்.

சிறுவன் கவண் கயிற்றையும் கூழாங்கற்களையும் எடுத்துக்கொண்டான். சிறுவனைக் கண்ட கோலியாத்துப் பரிகாசம் செய்தான். தாவீது அவனைப் பார்த்து, "வீரனே! நீ ஈட்டியையும் கேடயத்தையும் ஏந்தி வருகிறாய். நான் கடவுளின் நாமத்தோடு வருகிறேன்," என்றான்.

அதைக் கேட்ட கோலியாத்து, சிறுவன் மேல் பாயச் சென்றான். தாவீது தாமதியாமல் கவணில் கல்லை வைத்தான்; கோலி

யாத்தின் நெற்றிக்குக் குறிபார்த்துக் கல்லை விட்டான். அடிபட்டதும் கோலியாத்துக் குப்புற விழுந்தான். தாவீது அவனிடம் ஓடினான்; அவன் கழுத்தை வெட்டினான்.

தாவீது என்ற சிறுவன் கடவுளின் பரிசுத்த நாமத்தைத் துணையாகக் கொண்டதால் அல்லவா வெற்றிபெற்றான்?

5. மெழுகால் ஆன சிங்கம்

சந்திரகுப்தர் என்பவர் வட இந்தியாவை ஆண்ட அரசர். அவர் அரசராவதற்கு முன் அவருடைய சிறிய தகப்பன்மார் அவரைச் சிறையில் இட்டார்கள். அவர்கள் நந்தர்கள் எனப்படுவார்கள்.

நந்தர்கள் இருந்த நாட்டிற்கு அருகில் சின்ஹாலா என்ற நாடு இருந்தது. அந் நாட்டு அரசன் நந்தர்களின் அறிவைப் பரீட்சிக்க விரும்பினான். அவன் ஒரு கூட்டை நந்தர்களுக்கு அனுப்பினான். அதில் மெழுகால் செய்யப்பட்ட சிங்கம் ஒன்று வைக்கப்பட்டு இருந்தது. அது பார்ப்பதற்கு உயிர் உள்ள சிங்கம்போலக் காணப்பட்டது.

"இச் சிங்கத்தைக் கூட்டைத் திறக்காமலே ஓடச் செய்பவரே அறிவுள்ளவர்.

உங்களில் ஒருவர் அவ்வாறு செய்தால், நான் அவரைப் பாராட்டுவேன்" என்று அந்த அரசன் நந்தர்களுக்குக் கடிதம் எழுதினான்.

சிங்கத்தைக் கூட்டைத் திறக்காமல் ஓடச் செய்வது எப்படி என்று நந்தர்கள் விழித்தார்கள். அவர்களுக்கு ஒரு தந்திரமும் தோன்றவில்லை. அவர்களில் ஒருவன், "சிறையில் அடைப்பட்டிருக்கும் சந்திரகுப்தனை அழைப்போம்; அவன் இச் சிங்கத்தை விரட்டுவான்" என்றான்.

நந்தர்கள் சந்திரகுப்தரை அழைத்து வந்தார்கள். சின்ஹாலா நாட்டு அரசனது கடிதத்தை அவருக்குக் காட்டினார்கள். "நீ, இதனைக் கூட்டைத் திறவாமல் ஓடச் செய்தால், உன்னைச் சிறையில் இடோம்" என்றார்கள்.

சந்திரகுப்தர் சிங்கத்தைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தார்; சிறிதுநேரம் யோசித்தார். உடனே அவர் ஓர் இரும்புக் கம்பியை நெருப்பில் காய்ச்சினார்; அதனைச் சிங்கத்தின் விலாப்புறத்தில் நுழைத்தார். உடனே அச்சிங்கம் மாயமாய் மறைந்தது. அது எப்படி? யோசித்துச் சொல்லுங்கள்.

6. நாயும் அல்லிமலரும்

கௌபர் என்பவர் சிறந்த ஆங்கிலப் புலவர். அவர் ஒருநாள் மாலை ஓர் ஆற்றங் கரைமேல் நடந்து சென்றார். அவரது நாயும் அவரோடு சென்றது. ஆற்றில் அல்லிமலர்கள் அழகாக மலர்ந்து இருந் தன.

அப்போது காற்று இன்பமாய் வீசிக் கொண்டு இருந்தது. ஆற்றுநீர் அமைதி யாக ஓடிக்கொண்டு இருந்தது. கௌபர் மலர்ந்து இருந்த அல்லி மலர்களைப் பார்த் துக்கொண்டே போனார்.

கரை ஓரத்தில் சில புஷ்பங்கள் மலர்ந்து இருந்தன. அவற்றில் ஒன்றைப் பரிக்கப் புலவர் விரும்பினார். அவர் கரை யில் உட்கார்ந்தார். தன் கைத்தடியால் ஒரு புஷ்பத்தின் தண்டை வளைத்தார். அது உருவிக்கொண்டது. இரண்டாவது முறை அதைத் தடியால் பற்றி இழுத்தார். அது சிறிது தூரம் வந்து வழுக்கிக்கொண்டது. மூன்றாவது முறை, புஷ்பம் கரையண்டை வந்தது. அதற்குள் புலவர் ஆத்திரத் தோடு அதைப் பரிக்கக் கைநீட்டினார். அப் புஷ்பத்தண்டு தடியில் இருந்து விலகி, இருந்த இடத்திற்குப் போய்விட்டது.

கௌபர் புஷ்பத்தைப் பரிக்கச் செய்த முயற்சிகளை யெல்லாம் அவரது நாய் கவனித்துக்கொண்டே யிருந்தது. புலவர், மனம் வெறுத்து எழுந்தார். நாயும் அவரைத் தொடர்ந்தது.

பிறகு புலவர் அவ்வழியே திரும்பி வந்துகொண்டு இருந்தார். அப்போது அவரது நாய் அவருக்கு முன்னால் ஓடியது; அவர் முன் உட்கார்ந்த இடத்தை அடைந்தது; அங்கு இருந்து ஆற்றில் குதித்தது. அவர் பரிக்க முயன்ற அதே மலரைத் தன் பற்களால் பரித்தது; கரைக்கு நீந்தி வந்தது.

அதற்குள் புலவர் அங்கு வந்தார். நாய் அப்புஷ்பத்தை அவர் காலடியில் போட்டது; அவரை அன்போடு பார்த்துத் தன் வாலை ஆட்டியது. நாயின் அறிவைக் கண்ட புலவர் ஆனந்தம் அடைந்தார்.

"நான், என் எசமானனாகிய உன்னிடம் அன்பு பாராட்டுகிறேன். அதுபோல, உன்னைப் படைத்து உனக்கு எல்லா உதவிகளையும் செய்யும் கடவுளிடம் அன்புள்ளவனாய் இரு," என்ற பாடத்தை அந்த நாய் தனக்குக் கற்பித்ததாகப் புலவர் எண்ணி மகிழ்ந்தார்.

7. நாட்டிற்காக உயிரையும் விடுவேன்

முற்காலத்தில் நமது நாட்டில் பல பெண்மணிகள் அரசிகளாக இருந்தார்கள். அவர்கள் வீரம், தைரியம், தேச பக்தி முதலான நற்குணங்களோடு விளங்கினார்கள். அவர்களில் சாந்து பீபி என்னும் அரசியும் ஒருத்தி.

அவள் அஞ்சா நெஞ்சம் படைத்தவள். வாளேந்திப் போர் செய்பவள். அவள் பிறந்த அகமத் நகரில் ஒருமுறை கலகம் ஏற்பட்டது. நகரத்தாரில் ஒரு பிரிவினர் சாந்து பீபியின் தமையன் மகனை அரசனாக்க முயன்றனர். ஒரு பிரிவினர் ஓர் அநாதைச் சிறுவனை அரசனாக்க முயன்றனர். இப்புரட்சிக் கட்சியார் தங்களுக்கு உதவி செய்யுமாறு டில்லிச் சக்கரவர்த்தியான ஷாஜஹானின் மூத்த மகனான மூரட்டு என்பவனை வேண்டினர்.

இச் செய்தி சாந்து பீபிக்கு எட்டியது. அவள் கண்கள் கோபத்தால் சிவந்தன. அவளது வலக்கை வாளைப் பிடித்தது. அவள் தன் வீரர்களோடு அகமத் நகர் கோட்டைக்குள் வந்து சேர்ந்தாள்.

கோட்டைக்குள் இருந்த வீரர்களுக்குப் பல நாட்களுக்கு வேண்டிய உணவுப்

பொருள்களைத் தயாரித்தாள். வீரர்களுக்கு வீரத்தையும், தைரியத்தையும், தியாக சக்தியையும் ஊட்டினாள். நாட்டின் பொருட்டு உயிரையும் விடத் தயாராக இருக்குமாறு அவர்களுக்கு உபதேசித்தாள்.

கோட்டைக்குள் நுழைய மூராட்டுத் தன்னாலான முயற்சிகள் யாவையும் கையாண்டான். ஆயினும் பயன் பெறவில்லை. சாந்து பீபி ஓர் அதிசய அவதாரப் பெண்மணி என்றே மூராட்டு எண்ணினான்.

ஒருநாள் திடீரென்று மூரட்டு, தந்திரத்தால் கோட்டை மதிற்சுவரில் பிளவு ஒன்றை உண்டாக்கினான். சிறிது தாமதித்து இருந்திருந்தால், பகைவர் உள்ளே நுழைந்திருப்பர். ஆனால், வீர அரசி—சாந்து பீபி தன் வீரர்களை உற்சாகப் படுத்தினாள்; பிளவு உண்டான இடத்தை மூடிவிட்டாள்.

சாந்து பீபி தலையில் இட்ட முக்காடு காற்றில் பறக்க, வாளைக் கையில் பிடித்து, இரவும் பகலும் கோட்டையைச் சுற்றிக் கொண்டே வந்தாள். அவளது வீர உருவத்தைக் கண்ட மூரட்டு நடுங்கினான்.

மூரட்டு வெடிகுண்டுகளைக் கோட்டைக்கு அடியில் வைத்தான். அதனை எப்படியோ அரசி அறிந்தாள். தன் ஆட்களோடு சென்று எல்லாக் குண்டுகளையும் எடுத்து விட்டாள். "வீரர்களே! அஞ்ச வேண்டா. நான் நாட்டிற்காக உயிரையும் விடுவேன். நீங்களும் என்னைப் போன்று இருக்கவேண்டும்" என்று வீரப் பிரசங்கம் செய்தாள்.

கடைசியில் மூரட்டு, சாந்து பீபியோடு சமாதானம் செய்துகொண்டு போய் விட்டான். சாந்து பீபியின் சகோதரன் மகனே அகமத் நகருக்கு அரசன் ஆனான்.

8. நாயின் வீரச்செயல்

ஒரு கப்பல் ஒரு துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டது. அதில் பிரயாணிகள் பலர் இருந்தார்கள். அவர்களுள் பிரபு ஒருவர் இருந்தார். அவரிடம் நாய் ஒன்று இருந்தது. அக் கப்பலில் ஒரு வியாபாரியின் மனைவி ஒருத்தியும் இருந்தாள். அவள் குழந்தையைச் செவிலித் தாய் வைத்திருந்தாள்.

கப்பல் ஒரு துறைமுகத்தை அடைந்தது. அங்கு இருந்த பட்டணத்தைப் பார்க்கப் பிரயாணிகள் கப்பலில் இருந்து இறங்கினார்கள். அவர்களோடு குழந்தையை வைத்திருந்த செவிலித் தாயும் இறங்கினாள். அப்போது குழந்தை அவள் கையில் இருந்து நழுவிச் சமுத்திரத்தில் விழுந்து விட்டது.

குழந்தை விழுந்ததைப் பிரபு கவனித்தார்; உடனே தமது நாயை அழைத்தார்; அக்குழந்தையின் சட்டை ஒன்றை நாய்க்குக் காட்டினார்; குழந்தை விழுந்த இடத்தையும் அதற்குக் காட்டினார்.

உடனே அறிவுள்ள அந்த நாய் நடந்ததை உணர்ந்தது. சமுத்திரத்தில் குதித்தது. பிறகு ஒருவரும் நாயைக் காணவில்லை. குழந்தையையும் காணவில்லை. கப்பலில்

இருந்த எல்லோரும்நாயும் குழந்தையும் கட லுக்கு இரையாயின என்றே நம்பினார்கள்.

என்ன ஆச்சரியம்! கடலில் சிறிது தூரத்திற் கப்பால் நாய் காணப்பட்டது. அதைக் கண்ட சிலர், ஒரு படகில் ஏறிக் கொண்டு, அதுவரும்வழியில் சென்றார்கள். நாய் ஏதோ ஒரு பொருளை வாயில் கவ்விக் கொண்டு கஷ்டத்துடன் வருவதாகத்தெரிந் தது. படகோட்டிகள் விரைவாக நாயின் அருகில் படகைக் கொண்டு போனார்கள்; நாயைப் படகில் ஏற்றிக்கொண்டார்கள்.

நாயின் வாயில் என்ன இருந்தது? கடலில் விழுந்த குழந்தை! குழந்தை!! அது கடவுள் அருளால் உயிரோடு இருந் தது. படகு கப்பலை அடைந்தது. குழந் தையின் தாய் ஆவலோடு தன் குழந்தையை எடுத்தாள். பிரபு நாயைத் தடவி முத்தம் கொடுத்தார்.

குழந்தையின் தாய், தன் செல்வக் குழந் தையைக் காப்பாற்றிய நாயை எடுத்துப் பலமுறை முத்தம் கொடுத்தாள். பிரயா ணிகள் யாவரும் அந்த நாயையும் பிரபு வையும் வாழ்த்தி மகிழ்ந்தார்கள்.

9. அறம் வளர்த்த அண்ணல்

சென்னையில் பச்சையப்பன் கல்லூரி, காஞ்சீபுரத்திலும் சிதம்பரத்திலும் பச்சையப்பன் உயர்தரக் கலாசாலைகள்-இவற்றைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்ட துண்டா? அவற்றைத் தாபிக்க மூலகாரணராய் இருந்தவர் தென்னாடு போற்றும் பச்சையப்ப முதலியார் ஆவர்.

அப்பெரியார் 1754-ஆம் வருடம் காஞ்சீபுரத்தில் பிறந்தார். அவர் சிறுவராயிருக்கும்போதே தந்தையார் இறந்தார். தாயார், முதலியாரையும் அவருடைய இரண்டு சகோதரிகளையும் காப்பாற்ற வேண்டியிருந்தது. அவர்கள் மிகவும் ஏழைகளானதால், பிரபு ஒருவர் அவர்களைக் காப்பாற்றி வந்தார். அச்செல்வர் இறந்த பின்னர், தாயும் பிள்ளைகளும் சென்னையை யடைந்து, ஒரு கனவான் ஆதரவில் இருந்தார்கள்.

முதலியார் ஆங்கிலமும் தமிழும் நன்றாய்க் கற்றார்; வெள்ளைக்காரருக்குப் பொருள்களை வாங்கி யனுப்பும் துவிபாஷி (இரண்டு பாஷைகளை யறிந்தவர்) ஒருவரிடம் வேலையில் அமர்ந்தார். சில வருடங்கட்குப் பின்னர், முதலியார் ஆங்கிலேயர் ஒருவரிடம் துவிபாஷியாக அமர்ந்தார்.

யாவரிடமும் அன்பாகப் பேச வல்ல முதலி யார் தம் தொழிலில் திறமையுடன் நடந்து கொண்டார்.

துவிபாஷியாக இருந்த முதலியார் நாளடைவில் மிகுந்த பொருளைச்சேர்த்தார். ஆனால், அவரது பொருளை யனுபவிக்க அவ ருக்குப் பிள்ளை இல்லை. அதனால், முதலியார் மனைவியோடு புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை செய்தார்; அங்கங்கேபல சத்தி ரங்களைக் கட்டினார்; அங்கு ஏழைகளுக்கு அன்னம் அளிக்க ஏற்பாடுகள் செய்தார். முதலியார் செய்த பொருள் உதவியால் சிதம்பரம், காஞ்சிபுரம் என்ற இரு நகரங்க ளிலும் உயர்தரக் கலாசாலைகளை யேற் படுத்தி நடத்தி வருகின்றனர். சென்னையில் சீனு கடைத் தெருவில் உள்ள பச்சையப்பன் கல்லூரியும் முதலியார் பொருளுதவியா லேயே நடைபெற்று வருகின்றது.

முதலியார் செய்த அறத்தால் அவர் பெயர் தமிழ் நாட்டில் என்றும் மறக்கற் பாலதன்று. அவர் அறம் வளர்த்த அண் ணல் என்று யாவரும் போற்ற வாழ்ந்து, காலமானார்.

10. சக்கிலியின் சிறந்த அன்பு

நமது இந்தியாவில் சில வருடங்களுக்கு முன் விவேகானந்தர் என்ற மகான் ஒருவர் இருந்தார். அவர் பெரிய வேதாந்தி. அவர் ஓர் ஊரில் சில நாட்கள் தங்கினார். அப்போது அவரைப் பார்க்கப் பலர் வந்து கொண்டே யிருந்தனர்.

அவர்களுக்கு வேண்டிய விஷயங்களைச் சொல்லுவதிலேயே மகானும் கவனத்தைச் செலுத்தினார். தாம் சாப்பிடாமல் இருந்ததைப் பற்றி அவர் கவனிக்கவில்லை.

இவ்வாறு மூன்று நாட்கள் ஆயின. மூன்றும் நாள் இரவு ஜனங்கள் எல்லாரும் கலைந்தார்கள். மகான் தனிமையாக இருந்தார். அப்போது ஒரு சக்கிலி அங்குத் தோன்றினான். அவன் அவரை வணங்கினான்; "சுவாமி! தாங்கள் மூன்று நாட்களாக ஏதும் சாப்பிடவில்லையே. தங்களுக்குக் களைப்பு இல்லையோ?" என்று மரியாதையாகக் கேட்டான்.

மகான் அவனைப் பார்த்தார். அவன் தன்னை அன்புடன் விசாரிப்பதைக் கண்டு மகிழ்ந்தார். தான் மூன்று நாட்களாக உண்ணாது இருந்ததைக் கவனித்த அவனது அன்பிற்கு வியந்தார்.

அவர் அவனைப் பார்த்து, " அப்பா! உன்னால் எனக்கு ஏதேனும் கொடுக்க முடியுமானால், கொடு; சாப்பிடுகிறேன்" என்றார். அதைக் கேட்ட சக்கிலி மிகவும் பயந்தான். அவன் கீழான குலத்தில் பிறந்தவன் என்பது அவன் எண்ணம் அல்



லவா? தான் மகானுக்கு உணவு படைத்தால், தனக்கு என்ன தண்டனை விளையுமோ என்று பயந்தான்.

விவேகானந்தர் அவனை அன்புடன் நோக்கினார். " அப்பா! நீ, அன்புள்ளவன். நீயே உயர் குலத்தவன். அன்புள்ள எவனும்

உயர் குலத்தவனே. அன்பு இல்லாதவன் எவனும் தாழ்ந்த குலத்தவனே. நீ பிறந்த குலத்தைப் பற்றிக் கவலைப்படாதே. உன்னால் தரக்கூடிய உணவைக் கொண்டு வா" என்றார்.

சக்கிலி நல்லறிவைப் பெற்றான். தன்னால் தரக்கூடிய உணவை மகானுக்குத் தந்தான். அவர் மிகுந்த சந்தோஷத்துடன் உண்டார். அவ்வுணவு அவருக்கு மிகவும் இனிமையாக இருந்தது.

அன்புடையவன் எக்குலத்தவனாக இருந்தாலும், அவனே உயர்ந்தவன் என்பது இதனால் விளங்குகிறது அல்லவா?

11. குலத்தைக் கெடுத்த கோ

பல வருடங்களுக்குமுன் டில்லியைப் பிருதிவிராஜன் என்பவன் ஆண்டுவந்தான். கன்னோசி நாட்டை ஜயச் சந்திரன் என்பவன் ஆண்டான். இவர்களில் பிருதிவிராஜன் வீரபராக்கிரமம் பெற்றவன். ஜயச் சந்திரன் பொறாமைக்குணம் உடையவன். ஆதலால், அவன் பிருதிவிராஜன் பெருமையடைவதைக் கண்டு பொறாமை கொண்டான்.

சம்யுக்தை என்பவள் ஜயச்சந்திரன் மகள். அவள் மகா உத்தமி. அவள் மகா வீரனுன பிருதிவி ராஜனையே மணந்து கொள்ள விரும்பினுள்.

சம்யுக்தைக்கு விவாக காலம் வந்தது. ஜயச்சந்திரன் எல்லா அரசர்களையும் சுயம் வரத்திற்கு வரவழைத்தான்; ஆனுல், பிருதிவி ராஜனை மட்டும் வரவழைக்க வில்லை.

தன்னைச் சம்யுக்தை மணக்க விரும்பியுள்ளாள் என்பதைப் பிருதிவி அறிந்தான். அதனுல், அவன் சுயம்வரத்திற்கு வந்தான்; எவரும் அறியாதபடி வெளியில் மறைந்து இருந்தான்.

ஜயச்சந்திரன் பிருதிவிராஜனை அவமானப்படுத்த எண்ணினுன்; அவனைப் போன்ற உருவம் ஒன்றைச் செய்தான். அதைச் சுயம்வர மண்டபத்தின் வாயிலில் வைத்தான். சம்யுக்தை மணமாலையை எடுத்துக்கொண்டு மண்டபத்துள் நுழைந்தாள்; எங்கும் பிருதிவிராஜனைத் தேடினுள்; கடைசியில் அவன் உருவத்தைக் கண்டாள்; அந்தப் பதுமைக்குத் தன் மாலையைப் போட்டாள்.

உடனே பக்கத்தில் மறைந்து இருந்த பிருதிவிராஜன் அவளைத் தூக்கிக் குதிரை மேல் வைத்துக்கொண்டு டில்லிக்குப்

போனான். அங்கே அவளைக் கலியாணம் செய்து கொண்டான்.

ஜயச்சந்திரனுக்கு அடங்காக் கோபம் பிறந்தது. அவன் பிருதிவிராஜனை எவ்விதத்திலும் கொன்றுவிடத் தீர்மானித்தான். அதனால், அவன் முகம்மது கோரி என்னும் ஆப்கானிய அரசனை இந்தியாவுக்கு வரும்படி வேண்டினான். அவனும் பெரும் படையுடன் வந்தான். அவனோடு சேர்ந்து ஜயச்சந்திரன் தன் மருமகனைப் போரில் எதிர்த்தான்.

இந்தச் செய்தியைச் சம்யுக்தை அறிந்தாள். அவள் ஆண்வேடம் தரித்தாள்; தந்தையின் கூடாரத்துக்குச் சென்றாள்; அந்நிய நாட்டு முகம்மதியனோடு சேர்ந்து, தன் சொந்த மருமகனை எதிர்ப்பது நியாயம்அன்று என்பதைத் தெளிவாகஎடுத்துச் சொன்னாள். என்ன சொல்லியும், குலத்தைக் கெடுக்க வந்த ஜயச்சந்திரன் அவள் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை.

சண்டை நடந்தது. பிருதிவிராஜன் இறந்தான். சம்யுக்தை தீயில் விழுந்து இறந்தாள். கோரி முகம்மது டில்லியைப் பிடித்துக்கொண்டான்.

12. செய்ந்நன்றி மறவேன்

இராவணனைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டு இருப்பீர்கள். அவன் சீதையைக் கொண்டு சென்று இலங்கையில் வைத்து இருந்தான். சீதையின் கணவன் இராமன். அவன் பெரும்படையோடு இராவணனிடம் சண்டை செய்யச் சென்றான்.

இராவணன் தம்பிமாரில் கும்பகர்ணன் ஒருவன். அவன் தன் அண்ணனுக்குப் பல புத்திமதிகள் கூறினான். சீதையை இராமனிடம் விடும்படி சொன்னான். இராவணன் கேட்கவில்லை. முடிவில் கும்பகர்ணன் இராமனோடு சண்டைசெய்யப் புறப் பட்டான்.

விபீடணன் இராவணன் தம்பி. அவனும் பல நீதிகளை இராவணனுக்குச் சொன்னான். அவன் அவற்றைக் கேட்கவில்லை. அதனால், விபீடணன் இராமன் பக்கத்தில் சேர்ந்தான்.

கும்பகர்ணன் சண்டைக்கு வந்தான். அவனைக் கண்ட விபீடணன், "அண்ணா, நீ, என்னைப் போல இராமனுடன் சேர்ந்துகொள்; சுகமாக இருக்கலாம். ஏன் சண்டை செய்து சாகப் போகிறாய்?" என்றான்.

கும்பகர்ணன் கோபங் கொண்டான். "தம்பீ, என்னைத் தன் உயிர்போல எண்ணிக் காப்பாற்றினுன் நம் அண்ணன். இப்போது அவன் என்னைப் போருக்கு அனுப்பி யிருக்கிருன். கேவலம் உலக சுகத்தை விரும்பி, அண்ணனுக்குத் துரோகம் செய்யலாமா? நம்மைக் காப்பாற்றிய அவனுக்கு நாம் பதில் உதவி செய்யாதிருக்கலாமா? செய்ந்நன்றி மறக்கலாமோ?

அண்ணன் பகைவன் நம் பகைவன் அல்லவா? பகைவனேடு சேரலாமா? அவனிடம் அடிமையாக வாழலாமோ? அண்ணனுக்குத் துரோகம் செய்யாமல் சண்டையிட்டு இறப்பது மேல். பகைவனேடு சேர்ந்து நம் அண்ணனுக்கு விரோதியாக இருப்பது கேவலம். நான் அப்படி யிருக்க மாட்டேன். என் உயிரைத் துறக்கத் தயாராக இருக்கின்றேன். ஆனல், செய்ந்நன்றி மறவேன்," என்று உறுதியாகக் கூறினுன்.

கும்பகர்ணன் தான் சொன்னவாறே பகைவனுன இராவணனிடம் சண்டை செய்து வீரத்தோடு இறந்தான். அவன் செய்ந்நன்றி மறவாச் சிறந்த வீரன் அல்லவா?.

13. பெற்ற தாயினும் பெரிய தாய்

ராணசங்கா என்னும் இராஜபுத்திர அரசன் சித்தூரை ஆண்டான். அவன் இரண்டாவது மனைவி கர்ணவதி என்பவள். அவளுக்கு உதயசிங்கு என்ற குமாரன் இருந்தான்.

சித்தூரை முகம்மதியர் பிடித்துக் கொண்டார்கள். அப்போது அரசி, பன்னு என்னும் தோழியிடம் தன் குமாரனை விட்டு இறந்தாள். பன்னு உதயசிங்குவை ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வந்தாள்.

பின்னர், இறந்த அரசனின் முதல் மனைவி வயிற்றுப் பிள்ளை அரசன் ஆனான். ஆனால், அவன் விரைவில் கொல்லப்பட்டான். ஜனங்கள் பன்பீர் என்பவனை அரசனாக்கினார்கள்.

பன்பீர் மிகக் கொடியவன். அவன் உதயசிங்குவைக் கொன்றுவிடத் தீர்மானித்தான். ஏன் ? உதயசிங்குவே நியாயமாக அரசன் ஆகவேண்டியவன் அல்லவா ? அவன் பெரியவன் ஆனதும், தன்னிடம் சண்டைக்கு வருவான் என்ற பயத்தால், பன்பீர் உதயசிங்குவைச் சிறுவனாக இருக்கையிலேயே கொல்லத் துணிந்தான்.

பன்பீர் பிள்ளையைக் கொல்லுதல்.

இச் செய்தி பன்னுவுக்கு எட்டியது. அவள் தன் குமாரனை உதயசிங்குவின் உடைகளால் அரச குமாரனைப்போல அலங்கரித்தாள்; உதயசிங்கு படுக்கும் தொட்டிலில் தன் மகனைப் படுக்கவைத்தாள்; உதய சிங்குவை ஒரு கூடையில் படுக்கவைத்தாள்; அவன் மேல் இலைகளைப் போட்டு மூடினுள்; அக் கூடையயைக் குறிபிட்ட இடத்தில் வைத்திருக்கும்படி, தன் ஆளை அனுப்பினுள்.

அன்றிரவு பன்பீர் உருவிய வாளுடன் பன்னு இருந்த அறையுள் நுழைந்தான்; அரச உடையுடன் தொட்டிலில் தூங்கிய பன்னுவின் மகனை உதயசிங்கு என்றே நம்பினுன்; அதன் வயிற்றில் வாளைப் பாய்ச்சினுன். சிறுவன் வீறிட்டுக் கத்தி இறந்தான்.

பன்னு சிறுவனைத் தகனம் செய்தாள்; பிறகு அரண்மனைக்கு வெளியே ஓடினுள்; தன் ஆளுடன் கூடையைத் தூக்கிக்கொண்டு நடந்தாள்; இரண்டொரு அரசர்களிடம் சென்றுள்; நடந்ததைச் சொன்னுள்; குழந்தையைக் காப்பாற்றும்படி வேண்டினுள். ஒருவரும் அதற்கு இணங்கவில்லை. முடிவில் ஓர் அரசன் சிறுவனைக் காப்பாற்ற வொப்புக் கொண்டான். சிறுவனும் அங்கு வளர்ந்து வந்தான்.

பன்னு சித்தூருக்குத் திரும்பினுள்; சில வருடங்கள் சென்றன. ஜனங்கள் பன்பீரை வெறுத்தார்கள்; அவனைத் துரத்தி விட்டு, உண்மையான உரிமையுள்ள அரசனைத் தேடினுர்கள். அப்போது பன்னு, தன் வரலாற்றைச் சொல்லி, உதயசிங்கை அரசனுக்கினுள். பன்னு, அரசகுமாரனைக் காப்பாற்றத் தன் ஒரே மகனைப் பறிகொடுத்தாள்; பிறகு, அரசகுமாரனைக் காப்பாற்ற அரும்பாடு பட்டாள்; முடிவில், அவனை அரசனுக்கினுள். இவற்ருல், இவள் 'பெற்ற தாயினும் பெரிய தாய்' அல்லவா?

14. உயிரினும் நண்பனே சிறந்தோன்

தமிழ் நாட்டில் செஞ்சிக் கோட்டை என்னும் நகரம் உண்டு. அதனை ஜயசிங்கு என்ற மன்னன் ஆண்டுவந்தான். அவனுக்கு முகம்மதுகான் என்ற நண்பன் இருந்தான். அவன் ஜயசிங்குவின் உயிர்த் தோழன்.

ஆறுகாட்டு நவாபு திடீரென்று செஞ்சிக் கோட்டையின்மீது படையெடுத்தான். அப்போது முகம்மதுகானுக்குத் தன்ஊரில் திருமணம் நடந்துகொண்டு இருந்தது. நவாபு, படையெடுத்து வந்ததைத் தெரி

வித்து, முகம்மதுகானை உடனே வரும்படி ஜயசிங்கு கடிதம் எழுதி யிருந்தான். அதைக் கண்ட உடனே முகம்மதுகான் எழுந்தான். திருமணத்திற்கு வந்திருந்த யாவரிடமும் விஷயத்தைச் சொன்னான். அவர்கள் திரு மணத்தை முடித்துவிட்டுப் போகச் சொன்னார்கள். முகம்மதுகான் இணங்கவில்லை. அவன் அவர்களைப் பார்த்து, "பெரியோர்களே ! ஜயஸிங்கு என் உயிர்த் தோழன். இப்போது பகைவன் அவனைச் சண்டைக்கு அழைக்கிறான். இந்தச் சங்கடமான நிலையில், நான் உடனே செஞ்சிக்குப் போக வேண்டாவா ? எனது கலியாணம் என் நண்பனைவிடச் சிறந்ததா ? எனது உயிர்த் தோழனைத் தவிக்க விட்டு, நான் திருமணத்தில் சுகமா யிருப்பது நியாயமா? என் நண்பனுக்காக உயிரையும் விடத் தயாராக இருக்கிறேன்.என்னைப் போன்ற வீரர்களுக்குத் தேசபக்தி இருக்கவேண்டாவா ? அந்நியன் நாட்டை எதிர்க்கையில், நாம் சுகமாக இருப்பது பெருந் தவறு. என் சுகத்தினும் - திருமணத்தினும் - உயிரினும் நண்பனே சிறந்தோன். ஆதலால், நான் போய் வருகிறேன்" என்று சொன்னான். உடனே அவன் தன் குதிரைமீது பாய்ந்து ஏறிச் சென்றான்.

முகம்மதுகான் செஞ்சிக்கோட்டையை அடைந்தான்; பெரும்படையோடு வந்த பகைவனை எதிர்த்தான்; பகை வீரர்களை வெட்டிச் சாய்த்தான்; அவனை எதிர்ப்பவர் ஒருவரும் இல்லை. சண்டை நடந்த இடத்தில் முகம்மதுகான் வீரசிங்கம்போலத் திரிந்தான்.

ஆறுகாட்டு நவாபின் சேனைத் தலைவன் முகம்மதுகானுக்குப் பயந்து ஓர் இடத்தில் மறைந்து இருந்தான். சண்டை முடிந்த பிறகு முகம்மதுகான் அந்த வழியாகப் போய்க்கொண்டு இருந்தான். அப்போது சேனைத் தலைவன் முகம்மதுகானைச் சுட்டுக் கொன்றான்.

முகம்மதுகான் திருமணத்தைப் பெரிதாகக் கருதினானா? நண்பன் பொருட்டுச் சண்டை செய்தான்; பகைவனால் தந்திரமாகக் கொல்லப்பட்டான்.

பிறகு, ஜயசிங்கு, பகைவனைத் தோற்கடித்தான். தன் நண்பன் இறந்த பிறகு, தான் உயிருடன் இருப்பது கேவலம் என்று நினைத்து, தன்னைத் தானே வெட்டிக்கொண்டு இறந்தான். இருவரும் 'உயிரினும் நண்பனே சிறந்தவன்' என்றே எண்ணினர். அதனால் இருவரும் இறந்தனர்.

15. மானம் பெரிதா ? உயிர் பெரிதா ?

சோழன் செங்கணான் என்பவன் சோழ நாட்டை யாண்டு வருகையில், சேரநாட்டைச் சேரன் - கணைக்காலிரும்பொறை என்பவன் ஆண்டு வந்தான். சேரனுக்கும் சோழனுக்கும் நெடுங்காலம் பகைமை முற்றி யிருந்தது. அதனால், சோழன் - செங்கணான் சேர நாட்டின் மீது படையெடுத்துச் சேரனை வென்று, சிறைப் படுத்தினான்.

சேரன் சிறைப்பட்டதை யறிந்தஅவன் ஆசிரியர் சோழன்மீது ஒரு நூலைப் பாடிச் சென்றார்; அந்நூலில் சோழனது வெற்றித் திறத்தைப் புகழ்ந்து கொண்டாடினர். அதுகேட்டு மகிழ்ந்த சோழன் புலவர் மாணுக்கனுன சேரன் - கணைக்காலிரும் பொறையை விடுதலை செய்து விட்டான்.

சில ஆண்டுகள் கழிந்த பின்னர், மீண்டும் சேரனுக்கும் சோழனுக்கும் பகைமை மூண்டது. அதன் காரணமாகச் சோழன் சேரனைப் போரில் வென்று, தன் அரண்மனையை யடுத்த சிறையில் வைத்திருந்தான். சேரன் தன் நிலையை யெண்ணி, யெண்ணி வாட்டமுற்றான்.

ஒருநாள் சேரன் காவற்காரனை விளித்து, "அப்பா, எனக்கு நீர் வேட்கை அதிகமாக இருக்கிறது. ஒரு பாத்திரத்தில் நீர் கொண்டுவா" என்றான். காவலன் அரசனை ஏளனமாகப் பார்த்து நகைத்து, "ஆகா; அப்படியே" எனக் கூறிச் சென்றான். சென்றவன், வெகுநேரங் கழித்துப் பாத்திர மொன்றில் நீரைக் கொணர்ந்து அதனைத் தன் இடது கையால் சிறைக்குள் வைத்துச் சென்றான்.

காவலன் செய்த அவமதிப்பு அரசனை வாட்டியது. அவன், "நாம் ஓர் அரசனாக இருந்தும், நம்மை யொத்த அரசனிடம் கைதியாக இருப்பதால் அல்லவா, கேவலம் காவலனும் நம்மை அவமதிக்க நேர்ந்தது! மானம் பெரிதா? உயிர் பெரிதா? மானம்போய் உயிர் வைத்திருப்பதிற் பயன் யாது?" என்று கூறி, ஒரு பாட்டை யெழுதி வைத்துச் சிறைக்குள்ளேயே இறந்தான்.

சேரன் இறந்ததற்குக் காரணத்தை யறிந்த சோழ மன்னன், சேரனை அவமதித்த சேவகனைத் தண்டித்துச் சேரன் மரணத்திற்கு மிகவும் வருந்தினான்.

16. நாட்டுப் பற்றுடைய வீரத்தாய்

தமிழ் நாட்டில் சேரநாடு என்பதும் ஒன்று. அதனைச் சேர அரசன் ஒருவன் ஆண்டுவந்தான். அவன் வேறோர் அரசனோடு சண்டைக்குப் போக நேர்ந்தது. அரசன், "நாட்டில் உள்ள வீரர்கள் யாவரும் வருக" என்றான்.

அந்த நாட்டில் ஒரு வாலிபன் இருந்தான். அவன் வயது முதிர்ந்த தன் தாயுடன் வசித்து வந்தான். அவன் தன் தாயை விட்டுப் போக விரும்பவில்லை. அதனை அந்தத் தாய் அறிந்தாள்.

அவள் மகனைப் பார்த்து, "மகனே! நீ, ஏன் போருக்குப் போகத் தயங்குகின்றாய்? நான் தள்ளாத கிழவி என்று நினைக்காதே. நான் கிழவியாக இருந்தாலும், வீர இரத்தம் என் உடம்பில் ஓடுகிறது. என்னைப் பற்றி நீ கவலைப் படாதே. உன் தாயைவிடத் தேசபக்தியே சிறந்தது. தாய் நாட்டிற்கு உன் உயிரையும் விடத் தயாராக இரு; உன்தாயை விடத் தாய்நாடே சிறந்தது," என்றாள்.

மகன் தாயைப் பெரிதாக நினைத்தானே தவிர, நாட்டைப் பற்றிக் கவனிக்கவில்லை. தன் பொருட்டுச் சண்டைக்குப் போகத்



வீரத்தாய் இறந்த மகனைக் காணுதல்

தயங்குவதைத் தாய் உணர்ந்தாள். அத னல், அவள் கோபங் கொண்டாள்.

அவள் கத்தி ஒன்றை எடுத்தாள்; அதை மகன் கையில் கொடுத்தாள். "மகனே! இந்தக் கத்தியோடு சண்டைக் குச் செல். முன் வைத்த காலைப் பின் வைக் காமல் சண்டை செய். மார்பில் காயம்பட்டு உயிர்விடு; முதுகில் காயம்பட்டு இறக்காதே, போ" என்றாள்.

மகன் வீரத்தோடு நின்றான். அவன் தன் தாயைப் பணிந்தான். "அம்மா! உனது வீரமும் தேசபக்தியும் என்னை உற் சாகப்படுத்துகின்றன. யான் பயந்தவன் அல்லன். உன் பொருட்டே சண்டைக் குச் செல்லத் தயங்கினேன். இப்போது போகின்றேன்" என்றான். வீரத்தாய் அவனை மார்போடு அணைத்து விடை தந் தாள்.

மகன் சண்டையில் சிறந்து விளங்கி னன்; பகைவரை அதம் செய்தான்; முடி வில் மார்பில் காயம்பட்டு இறந்தான். இச் செய்தியைக் கிழவி கேட்டாள்; நேராகச் சண்டை நடந்த இடத்தை அடைந்தாள்; இறந்த தன் மகனைத் தேடினள்; அவன் மார்பில் காயம்பட்டு இறந்து கிடப்பதைக் கண்டாள்.

அப்போது அவள் மனம் களித்தது. "பிள்ளையைப் பெற்ற பாக்கியம் அடைந்தவள் நானே. என் பிள்ளை நாட்டிற்காக உயிரை விட்டான். அவனே வீரமகன். நானும் சண்டை செய்து இறப்பேன்" என்றாள்.

அவள் கையில் கத்தியைப் பிடித்துச் சண்டை செய்தாள்; மார்பில் காயம்பட்டு இறந்தாள். அவள் சிறந்த வீரத்தாய் அல்லவா?

17. உன் வேலையைச் செய்ய வெட்கம் ஏன்?

ஈசுவர சந்திர வித்தியா சாகரர் சிறந்த வடமொழி வித்துவான். அவர் எப்போதும் சாதாரண உடைகளையே உடுத்துக் கொள்வார்; தன் வேலையைச் செய்யப் பின் வாங்கமாட்டார்.

அவர் ஒரு நாள் புகை வண்டியில் பிரயாணமானார். அவருடன் மாணவன் ஒருவனும் பிரயாணம் செய்தான். அவன் வீண் பெருமைக்காரன். தன் வேலையைச் செய்வது கேவலம் என்று நினைப்பவன். அவன் வித்தியா சாகரரைச் சாதாரண ஏழை மனிதன் என்று நினைத்தான். அவரோடு பேசவும் அவன் விரும்பவில்லை.

இருவரும் மிதுனபுரியில் இறங்கினார்கள். மாணவன் ஒரு பெட்டியை வைத்திருந்தான். அதைத் தூக்கிச்செல்ல ஓர் ஆளைத் தேடினான். ஆள் அகப்படவில்லை. அவன் கலங்கினான். அவனது கலக்கத்தை வித்தியா சாகரர் உணர்ந்தார்; தான் பெட்டியைத் தூக்கி வருவதாகச் சொன்னார். மாணவன் மன மகிழ்ந்தான்.

இருவரும் மாணவன் வீட்டை அடைந்தனர். வித்தியாசாகரர் பெட்டியை மாணவனிடம் தந்தார். மாணவன் அவருக்குச் சிறிது பொருள் கொடுக்க வந்தான். அவர் அதனைப் பெற மறுத்து விட்டார்; அவனது பெயரையும் விலாசத்தையும் அறிந்து கொண்டு போனார்.

மறுநாள் காலை மாணவனுக்கு அழைப்புக் கடிதம் ஒன்று வந்தது. அவ் வூரார் வித்தியா சாகரரைப் பெருமைப் படுத்த அன்று மாலை கூடுவார்கள் என்றும், அதற்கு மாணவன் வரவேண்டும் என்றும் அக் கடிதத்தில் எழுதப்பட்டு இருந்தது.

அன்று மாலை மாணவன் ஆடம்பரமாக உடுத்துக் கொண்டான்; கூட்டத்துக்குச் சென்றான். வித்தியாசாகரர் பூமாலையோடு கூட்டத்தின் நடுவில் விளங்கினார். அவரைக் கண்ட மாணவன் திகைத்தான்.

என்? முதல் நாள் தன் பெட்டியைச் சுமந்து வந்த சாதாரண மனிதனே உலகம் போற்றும் ஈசுவர சந்திர வித்தியா சாகரர் என்பதை உணர்ந்தான்; வெட்கமும் பயமும் கொண்டான்.

அப்போது வித்தியாசாகரர் அவனைத் தன்னிடம் அழைத்தார். "அன்புள்ள மாணவனே! உன் வேலையைச் செய்ய வெட்கம் என்? நேற்று நீ செய்தது தவறு. இனி, அவ்வாறு செய்யாதே. உன் வேலையைச் செய்ய வெட்கப்படலாகாது. வீண் பெருமை கூடாது" என்று, பல புத்திமதிகளை எடுத்துக் கூறினர்.

அன்று முதல் அந்த மாணவன் நல்ல வழியில் நடந்து வந்தான்; வீண் பெருமையை விட்டான்; தன் சொந்த வேலையைத் தானே செய்து வந்தான்.

18. இராபர்ட் பர்ன்ஸும் வயல் எலியும்

இராபர்ட் பர்ன்ஸ் என்பவர் ஏழைக் குடியானவர். அவர் ஸ்காட்லாந்து தேசத்தில் பிறந்தவர். அவர் பெரும் புலவர்; நல்லொழுக்கம் உடையவர்.

அவர் ஒரு நாள் வயலை உழுதுகொண்டு இருந்தார். அப்போது கொழுநுனி ஓர்

வயல் எலியின் வளையுள் பாய்ந்து, அழித்தது. தன் வீடு அழியவே, அதனுள் இருந்த எலி, பயந்து வெளியில் ஓடியது.

அதைக் கண்ட புலவர் மனம் வருந்தினார்; கலப்பையின் கொழுநுனி வளையைச் சேதப்படுத்தியதை உணர்ந்தார்; அதனால் எலி, பயந்து ஓடுகிறது என்பதை அறிந்தார். ஜீவகாருண்யம் நிறைந்த அவர் கண்ணீர் விட்டார்.

"சின்னஞ் சிறு பிராணியே! நீ, கவலையற்று வயலில் வளை செய்து வாழ்ந்திருந்தாய். உன் வளையைக் கொழுநுனி பாழாக்கி விட்டது. அந்தோ! நீ எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பாய்! உன் மனம் துன்பப்படுமே! பாவியேனுக்கு உன் வளை யிருந்தது தெரியாது. உன் உயிருக்கும் ஆபத்து வரும் என்று எண்ணிப் பயந்து ஓடினாயோ?

"வயலில் விளையும் நெல்லை நீ திருடிப் போவதும் உண்டு. அதே உனக்கு ஆகாரம். நீ, திருடுவதால் கெடுதல் என்ன? நீயும் பிழைக்க வேண்டாவா? நீ எவ்வளவு நெல்லைத் தின்றாலும், எனக்கு நஷ்டம் இல்லை. நெல் அதிகமாகவே இருக்கும்.

"உன் வீடும் சிதைந்தது. இனி வரும் மழைக் காலத்தையும் குளிர் காலத்தையும் எங்கு இருந்து கழிப்பாய்? வேறு ஒரு வீடு

கட்ட நின்னிடம் பொருளும் இல்லையே? ஐயோ! நீ என்ன கஷ்டப்படுகிறுயோ?

"என்னைப் பாவி என்று கோபிப்பாயோ? ஆம்; நீ கோபிப்பாய். நான் என் செய்வேன்? அறியாமல் உன் சிறு வீட்டைச் சிதைத்தேன். என் மேல் கோபிக்காமல் மன்னிப்பாய்.

"எலிச் செல்வனே! என்னை மன்னி; கடவுளை நம்பு. அவர் உனக்கு வேருெரு வீட்டைக் காட்டுவார். அங்கு நீ சுகமாக வாழ்வாய்," என்று, புலவர் அன்போடு பேசினுர்.

பிள்ளைகளே! இராபர்ட் பர்ன்ஸ் உயிர்ப் பிராணிகள் மீது கொண்டிருந்த அன்பைப் பாருங்கள். சின்னஞ் சிறு எலியைக் கண்டு, அவர் பேசிய விஷயத்தைக் கவனியுங்கள். எந்தப் பிராணியையும் அன்புடன் நேசிக்க வேண்டும். அதற்குத் தீங்கு செய்யலாகாது.

19. அனைவரும் ஒன்றே

ஈஸ்வர சந்திர வித்தியா சாகரர் என்பவர் வடமொழியிலும் வங்க மொழியிலும் பெரும் புலவர்; 'கல்விக்கடல்' என்னும் பட்டம் பெற்றவர்; அந்தண குலத்தவர். அவர் சீர்திருத்த நோக்க முடையவர்.

விதவைகள் மறுமணம் செய்துகொள்ளச் சட்டம் செய்தவர் அவரே. அப்பெரியார், ஆண்டவனால் படைக்கப்பெற்ற மக்களுள் உயர்வு தாழ்வு இல்லை என்னும் மிகச் சிறந்த நோக்கம் கொண்டவர்.

ஒருநாள் அவர் நண்பர் சிலருடன் பேசிக்கொண் டிருக்கையில், சேவகன் ஒரு வன் நடுப்பகல் வெயிலில் வழிநடந்து அவர் மாளிகையை யடைந்தான்; அவ ரிடம் தான் கொண்டுவந்த கடிதத்தைக்

கொடுத்தான். ஈஸ்வர சந்திரர் உடனே கடிதத்தைப் பிரிக்காமல், அவன் கையைப் பிடித்துத் தம் அருகில் உட்கார வைத்தார். மேலே பங்கா காற்றை வீசிக்கொண்டிருந்தது. பெரியார் கடிதத்தைப் பிரித்தார்; எழுதி யிருந்தவற்றைப் படித்தார்; அக் கடிதத்திற்குப் பதில் எழுதி, அதைச் சேவகனிடம் கொடுத்தார்; அவனது வழிச் செலவுக்குச் சிறிது பொருளையும் கொடுத்து அனுப்பினர். வேலையாள் பெரியாரை வாழ்த்திச் சென்றான்.

அவன் சென்ற பின்னர், அங்கு இருந்த நண்பர்கள் ஈஸ்வர சந்திரரை நோக்கி, "ஐயா, கேவலம் வேலைக்காரனை எங்களோடு சமமாக உட்காரவைத்து, எங்களை அவமானப் படுத்தினீரே!" என்றனர். பெரியார் நகைத்து, "அன்பர்களே, ஆண்டவன் அருட் படைப்பில் அனைவரும் ஒன்றே. அவன் வேலைக்காரன் என்றால் என்ன? நம்போன்றவன்; நம் சகோதரன் அல்லவா? அவனுக்குக் களைப்பு உண்டாகாதா? ஏழை என்றோ, தாழ்ந்த வேலை செய்பவன் என்றோ, நாம் ஒருவரைக் கேவலமாக நினைக்கலாமோ? என்னைவிட எவ்விதத்திலும் அவன் தாழ்ந்தவனாக எனக்குத் தோன்றவில்லை" என்றார்.

நண்பர்கள் ஈஸ்வர சந்திரரின் அன்பையும் அடக்கத்தையும் அறிவு நுட்பத்தையும் கண்டு வியந்தனர். அன்று முதல் அவர்களும் அனைவரும் ஒன்றே என்னும் சிறந்த கொள்கையைக் கடைப் பிடிக்கலானார்கள்.

20. இராணி—துர்க்காவதி

அக்பர் சக்கரவர்த்தி வடஇந்தியாவை ஆண்டு வருகையில், மத்திய இந்தியாவில் இருந்த 'குருமண்டலம்' என்னும் நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் மனைவி பெயர் துர்க்காவதி என்பது. அவள் இராஜபுத்திர மகள்; வீரம், தைரியம், பொறுமை, தேசாபிமானம் முதலிய உயர் குணங்களைப் பெற்றவள். அவள் போரில் அஞ்சாமல் நின்று சண்டை செய்பவள்.

துர்க்காவதி 'வீர நாராயணன்' என்னும் மகனைப் பெற்ற சில வருடங்களில் அரசன் இறந்தான். அரசனுக்குப் பின்னர் இராணி - துர்க்காவதியே குருமண்டலத்தை யாண்டு வந்தாள்; குடிகளைத் தன் உயிரினும் மேலாக நேசித்துப் பாதுகாத்தாள். நாடு செழிப்புற்றது: மக்கள் இன்பமாகவே இருந்தனர்.

அக்பரின் சேனைத் தலைவனுன அசப்கான் என்பவன் குருமண்டலத்தைப் பிடிக்க விரும்பினுன்; ஒரு பெருஞ் சேனையோடு குருமண்டலத்தை யடைந்தான். துர்க்காவதி வாளேந்திப் போர்க்களத்தை யடைந்தாள். அவளது வீரத்தைக் கண்ட குடிகள், தங்கள் உயிரைத் துரும்பாக மதித்து, மொகலாயருடன் போர் புரிந்தனர். மொகலாயர் துர்க்காவதியால் தோற்கடிக்கப்பட்டனர். அசப்கான் அவமானம் அடைந்து, திரும்பினுன்.

எவ்விதத்திலும் குருமண்டலத்தைக் கைப்பற்ற விருப்பங் கொண்ட அசப்கான், குருமண்டல வீரர்களுக்கு ஏராளமாகப் பணத்தைத் தந்து, தன் வசப்படுத்திக் கொண்டான். கேவலம் பணத்தாசை கொண்ட பதர்கள், தங்கள் தாய்போன்ற அரசியையும், உயிரினும் உயர்ந்த தாய் நாட்டையும் காட்டிக் கொடுத்துவிட்டார்கள்.

வீரர்களைத் தன் வசப்படுத்திய அசப்கான், குருமண்டலத்தை இரண்டாம் முறை எதிர்த்தான். இம்முறை அரசியும், அவள் மகனும், அரசியிடம் அன்புகொண்ட சில வீரர்களுமே மொகலாயருடன் சண்டையிட்டனர். அச்சண்டையில் இளவரசன்

இறந்தான். அரசி, கடுங் கோபத்துடன் போர்புரிந்தாள. அவள்கண்கள் ஒன்றில் அம்பு பாய்ந்தது. அந்நிலையிலும் அரசி வீரத்தோடு போர் புரிந்தாள் ; இறுதியில், பகைவர் அம்புக்கு இலக்காகி அமர்க்களத்தில் ஆவி துறந்தாள். நாட்டின் பொருட்டு உயிர்விட்ட அரசியின் பெருமையை என்னென்பது !

21. காலந் தவருமை

குலசேகரன் என்பவன் கோபாலபுரத்து அரசன். அவனது சேனைத் தலைவன் சோமண்ணு என்பவன். அவன் உயரமாயும், பார்க்கப் பயங்கரத் தோற்றம் உடையவனுயும் இருப்பான். குலசேகரன் சோமண்ணுவைப் பிரியமாக நடத்தி வந்தான்.

கோபாலபுரத்துக்கு அடுத்த ஊர்,கோவிந்தபுரம். அதனைக் குணபாலன் என்பவன் ஆண்டு வந்தான். குணபாலன் பலசாலி ; தைரியமுள்ளவன். அவன் எவ்விதத்திலும் கோபாலபுரத்தைப் பிடித்துக் கொள்ள விரும்பினுன்.

ஒருகால் குலசேகரன் பல ஸ்தலங்களுக்குப் போயிருந்தான். அப்போது

TB
O73(5)
N32
85160

நாட்டைச் சோமண்ணு பார்த்து வந்தான். இதனைக் குணபாலன் அறிந்தான்; கோ பாலபுரத்தைப் பிடிக்க அதுவே தக்க சமயம் என்று எண்ணினன். உடனே அவன் பெரிய சேனையோடு புறப்பட்டான்.

இந்தச் செய்தியை ஆட்கள் சோமண் ணுவுக்குத் தெரிவித்தார்கள். சோமண்ணு, “ஓ, கேவலம் இக்குணபாலனு வருகிறுன்? அவன் பாதி வழி வந்து, மீண்டும் தன் ஊருக்கே போய்விடுவான். அவன் பைத்தி யம் பிடித்தவன். அவனைப் பொருட்படுத்தி நாம் முன் ஜாக்கிரதையாக இருக்க வேண் டுவதில்லை” என்றுன்.

உண்மையிலேயே சோமண்ணு சிறந்த வீரனுக இருந்தாலும், அவன் பெரிய சோம்பேறி. முன் எச்சரிக்கையாக இருக்க மாட்டான். இதனை அரசனுடைய மந்திரி கள் நன்கு அறிந்தவர்கள். அதனுல் அவர்கள் அவனைப் பார்த்து, “ஐயா, குண பாலன் பெரிய வீரன். அவன் சமயம் பார்த்து வருகிறுன். ஆதலால், நாம் முன் ஜாக்கிரதையாக இருப்பது நலம், படை களைத் தயாராக இருக்குமாறு செய்வோம்,” என்றனர். குணபாலனுக்குக் கோபம் வந்து விட்டது. “என்ன மந்திரிகளே! உங்களுக் குப் பைத்தியம் உண்டோ? அவனுவது

இங்கு வருவதாவது! அவன் அவ்வாறு வந்தால்தான் என்ன? உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டிருங்கள்,” என்றான்.

குணபாலன் தன் நாட்டின்மீது சண்டைக்கு வரப்போவதில்லை யென்றே சோமண்ணா நினைத்தான். ஆனால், உண்மையாகவே குணபாலன் வந்து விட்டான். அவனுடைய வீரர்கள் கோபாலபுரத்துள் நுழைந்து, கொள்ளை யடித்தார்கள். திடீரென்று பகைவர் உள்ளே நுழைந்து விட்டதால், சோம்பேறியான சோமண்ணாவினால் ஒன்றும் செய்யக் கூடவில்லை. அப்பொழுதுதான் அவன் தன் அஜாக்கிரதையை நினைத்து வருத்தப்பட்டான். “அப்பொழுதே நான் ஜாக்கிரதையாக இருந்திருந்தால், இப்பொழுது இத்துன்பம் வந்திராதே! ஐயோ! காலந்தவறாமல் எக்காரியத்தையும் செய்யவேண்டும் என்பதை மறந்து விட்டேனே!” என்று வருந்தினான்.

முடிவில் வருந்திப் பயன் என்ன? குணபாலன் கோபாலபுரத்தைப் பிடித்துக் கொண்டான். சோமண்ணா உயிர் தப்பியது போதும் என்று எங்கோ ஓடி விட்டான். உரிய காலத்தில் முன்ஜாக்கிரதையாகஇருந்திராததால் அல்லவா, சோமண்ணா இக்கதி அடைய நேரிட்டது?

22. அரசியின் அருங்குணம்

விக்டோரியா மகாராணியார் இன்று நம்மை ஆண்டுவரும் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் பாட்டியார் ஆவர். அவர் அரசியாராக இருக்கையில், பல நன்மைகள் செய்திருக்கின்றார். அவர் மிகவும் நல்லவர்; நிரம்பப் படித்தவர்; அடக்கம் உள்ளவர். அவர் எப்போதும் மிக எளிய ஆடைகளையே அணிந்துகொண்டு இருந்தார்.

ஒரு நாள் அவர் ஒரு கடைக்குச் சென்றார். அக்கடையில் பல்வகைப் பொருள்கள் வைக்கப்பட்டு இருந்தன. ஒரு பெண் அக்கடைக்கு வந்தாள்; அங்கு இருந்த சில பொன் நகைகளைப் பார்த்தாள்; அவற்றுள் ஒரு சங்கிலியை எடுத்தாள். அவள் கண்கள் ஆவலோடு அதனை உற்றுப் பார்த்தன. அதை உடனே வாங்க வேண்டும் என்பது அவளது விருப்பம்.

அவள் உடனே கடைக்காரனை நோக்கி, "ஐயா, இதன் விலை யாது?" என்று கேட்டாள். கடைக்காரன் அதன் விலை, "ஐம்பது பொன்" என்றான். உடனே அப்பெண்ணின் முகம் வாட்டம் அடைந்தது. ஏன்? அவளிடம் முப்பது பொன்னே இருந்தது. மற்றும் இருபது பொன்னுக்கு

என்ன செய்வது என்று அவள் விழித்தாள். சங்கிலியை வாங்காமற் செல்லவும் அவள்மனம் இடந்தரவில்லை.

பின்னர் அவள், கடைக்காரனை நோக்கி நயமான குரலில், "ஐயா, என்னிடம் முப்பது பொன்னே இருப்பது. அதைப் பெற்றுக்கொள்; நாளைக்கு இருபது பொன் தருகிறேன்; இப்பொழுது சங்கிலியைக் கொடு" என்றாள். கடைக்காரன் நகைத்து, "கொடுக்க முடியாது" என்றான். உடனே அப் பெண் முகவாட்டத்துடன் வீடு சென்றாள்.

கடையில் நடந்த இவ்விஷயத்தை அரசியார் நன்றாய்க் கவனித்தார்; அப் பெண்ணின் வாட்டத்தைக் கண்டு இரங்கினார். அவர் உடனே ஐம்பது பொன்னுக்கு அச் சங்கிலியை வாங்கினார். அதனுடன் ஒரு கடிதத்தையும் எழுதி, இரண்டையும் அப் பெண்ணின் விலாசத்துக்கு அனுப்பினார்.

பெண் ஆவலோடு சங்கிலியை எடுத்தாள்; அத்துடன் இருந்த கடிதத்தைப் பிரித்தாள். அதில் கீழ்வருமாறு எழுதப்பட்டு இருந்தது:

"அன்புள்ள பெண்ணே! நேற்று நீ, சங்கிலியை வாங்க விரும்பியதைக் கண்டேன்; பின்னர், நீ அதை வாங்க முடியாமல் வீடு

திரும்பியதைக் கண்டு வருந்தினேன். இச் சங்கிலியைப் போட்டுக்கொள். ஆனால், உனக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதாவது, கூடியவரையில், ஆடம்பரம் இன்றி, அடக்கத்தோடு இருப்பது நல்லது. நமது சக்திக்கு மேற்பட்டதை மனத்தாலும் எண்ணலாகாது."

இக் கடிதத்தால் அப்பெண் நல்லறிவைப் பெற்றாள். அன்று முதல் அவள் அடக்கத்தோடு வாழ்ந்து வந்தாள்.

23. இடைச்சி - இந்திராணி

மதுரை ஜில்லாவில் திருமங்கலம் தாலூகாவில் இடையர் வசிக்கும் தெரு ஒன்று உண்டு. அதில் சில ஆண்டுகளுக்கு முன் இந்திராணி என்ற பெயருடைய இடைச்சி இருந்தாள். அவள் சிறு பெண்ணாயிருக்கையில் அவளது பெற்றோர் இறந்து விட்டனர். அதனால், அவளைக் காப்பாற்றுவோர் ஒருவரும் இலர். எனவே, அவள் தயிரை விலைக்கு வாங்கி, அதனை விற்று வந்த இலாபத்தில் பிழைத்து வந்தாள்.

இந்திராணி இருபது வயதை அடைந்தாள். ஒருநாள் அவள், "என்ன! எனக்

கோ வயது இருபதாகிறது. என்னைக் காப் பாற்றக் கூடியவர் ஒருவரும் இலர். நான் தயிரை விற்று ஜீவனம் செய்து வருகிறேன். இத் தொழிலில் சொற்ப வருமானமே கிடைக்கிறது. இவ்வாறு இருந்தால், நான் எந்தக் காலத்தில் நான்கு பேர் மதிக்கும் நிலையுடைய பணக்காரி யாவது? தயிர் வியா பாரத்தை விட்டுவிட்டுப் பால் வியாபாரம் செய்தால் நலமாயிருக்கும். பாலை விலைக்கு வாங்கி, அதனளவு நீரைச் சேர்த்து விற் ருல், நல்ல ஊதியம் கிடைக்கும். நான் விரைவில் பணக்காரி யாகலாம்'' என்று தனக்குள் யோசித்துக் கொண்டாள்.

அன்று முதல் இந்திராணி, பால் வியா பாரம் செய்ய ஆரம்பித்தாள். ஒரு வருடத் திற்குள் அவள் ஒரு வீட்டை வாங்கினுள்; மறு வருடத்தில் தனக்கு வேண்டிய நகை களைச் செய்துகொண்டாள்.

இந்திராணி பால் வியாபாரம் செய்ய ஆரம்பித்து ஐந்து வருடங்கள் ஆயின. அவள் சிறந்த பணக்காரியானுள். அவள் வயதையும் செல்வத்தையும் கண்ட பல வாலிபர்கள் அவளை மணம் செய்துகொள்ள முயன்றனர். சிலர் அவள் வீட்டிற்கு அடிக் கடி போய் வந்தனர். ஆனுல் இந்தி ராணி, திடீரென்று தனக்கு உண்டான

பணத்தைக் கண்டு கர்வங் கொண்டவளாய் ஒருவரையும் மதிப்பதில்லை; தன்னைத் தேடி வந்த வாலிபர்களில் ஒருவனையாவது மணக்க அவள் விரும்பவில்லை.

நாளடைவில், அவள் பெரும் பணக்காரியாகவே, தலைகால் தெரியாமல் நடந்து, பலருடைய கோபத்திற்கு ஆளானாள். அவள் வசித்திருந்த வீதியில் இருந்தவர்கள் அவளை வெறுத்தார்கள். அந்த வீதியில் சில போக்கிரிகள் இருந்தார்கள். அவர்கள் அவள் கர்வத்தை அடக்கிவிட நினைத்தனர்.

ஓர் இரவு எங்கும் இருட்டாயிருந்தது. சுமார் பன்னிரண்டு மணியிருக்கலாம். அப்போது நான்குபேர் இந்திராணி வீட்டில் நுழைந்தனர். அவள் பணத்தையும் நகைகளையும் வைத்திருந்த பெட்டியைத் தூக்கிக்கொண்டு மறைந்தனர். அவர்கள் யார்? அவர்கள் இந்திராணி வசித்த வீதியில் இருந்த போக்கிரிகளே யாவார்கள்.

மறுநாள் காலையில் இந்திராணி தன் நகைகளைப் பார்க்கச் சென்றாள். பெட்டியைக் காணோம். அவள் பெருந்திகில் அடைந்தாள்; வீடு முழுவதும் தேடினாள்; எங்கும் பெட்டியைக் காணவில்லை; வாயிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டாள்.

"அந்தோ! பாலில் தண்ணீரைக் கலந்து ஏழை மக்களை மோசம் செய்ததால் அல்லவா, நான் பணக்காரியானேன்? என் பணம் —நான் மோச வழியில் சம்பாதித்த பணம் —மோசமாய்ப் போய்விட்டது. நான் செய்தது பாதகச் செயல்; நான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்து இருந்தால் அப்பணம் என்னை விட்டு அகலாதே!" என்று கூறி அழுதாள்.

அன்று முதல் இந்திராணி நல்ல குணத்தை யுடையவளாய்க் கஷ்ட ஜீவனம் செய்து பிழைக்க ஆரம்பித்தாள். பிறரை மோசம் செய்தல் நன்றோ?

24. கோய்யாப்பழச் சிறுவன்

இந்திரபுரி என்ற பட்டினத்தில் பெரிய சாப்பாட்டு விடுதி ஒன்று உண்டு. அவ்விடுதியில் பிரபுக்கள் பலர் சாப்பிடுவது வழக்கம். ஒவ்வோர் ஊராரும் அந்நகருக்கு வந்தால் அங்குத்தான் தங்குவார்கள்.

ஒரு நாள் இரவு ஏழுமணி சுமாருக்கு இரண்டு பிரபுக்கள் அந்த விடுதியின் வாயிற்படியண்டை நின்று கொண்டிருந்தார்கள். அப்போது பன்னிரண்டு வயதுடைய சிறுவன் ஒருவன் இரண்டு பெரிய கொய்யாப் பழங்களை எடுத்துக் கொண்டு

அவர்களிடம் சென்ருன்; சென்று அவர்க ளுக்கு வந்தனம் புரிந்தான். அவர்கள் சிறுவனை நோக்கி, "தம்பீ! என்ன காரிய மாக எங்களிடம் வந்தாய்?" என்று கேட் டார்கள். சிறுவன், "ஐயா! நான் ஓர் ஏழைச் சிறுவன். என்வேலை கொய்யாப் பழம் விற்பது. இதோ என் கையில் இருக் கும் இரண்டு கொய்யாப் பழங்களையும் நீங் கள் எடுத்துக் கொள்ளுங்கள். இவற்றின் விலை இரண்டு அணு. நீங்கள் இரண்டணு கொடுத்தால் தான் எனக்கு உணவு கிடைக் கும். இன்றேல், யான் பட்டினி கிடக்க நேரிடும்", என்ருன்.

சிறுவன் கூறியவற்றைக் கேட்ட அவ் விரு பிரபுக்களில் ஒருவர் அவனைப் பார்த்து, "பையா! எங்களுக்குக் கொய்யாப் பழங்கள் வேண்டா; வேண்டுமானல் இரண்டணு கொடுக்கிருேம். நீ வாங்கிக்கொள்" என் ருர். சிறுவன், அவரை நோக்கி, "கன வானே! என் பழங்களைப் பெற்றுக்கொண்டு இரண்டணு கொடுங்கள். என்னிடம் இருந் து ஒன்றும் வாங்கிக் கொள்ளாமல் எனக் குப் பணம் கொடுத்தால் நான் வாங்க மாட் டேன். தயவு செய்து, பழங்களைப் பெற் றுக்கொண்டு, பணம் கொடுங்கள். என்னைக் காப்பாற்றுங்கள்," என்று வேண்டினன்.

பிரபு அவனது பரிதாப நிலையைக் கண்டார். அவர் மனம் இளகியது. சிறுவன் மிகவும் அறிவாளி என்று அவன் பேசியதில் இருந்தே தெரிந்துகொண்டார். அவர், "தம்பீ! என்னிடம் சில்லரை இல்லை. ஒரு ரூபாய் இருக்கிறது" என்றார். பையன், "பிரபுவே! நான் அந்த ஒரு ரூபாய்க்குச் சில்லரை மாற்றிக்கொண்டு வருவேன். தாங்கள் என்னை நம்பலாம். நான் விரைவில் மாற்றிக் கொண்டு வருவேன்," என்று சொன்னான்.

பிரபு அச் சிறுவனிடம் பணத்தைக் கொடுத்தார். சிறுவன் மறைந்தான். கால் மணி ஆயிற்று—அரைமணி ஆயிற்று—சிறுவனைக் காணோம். பிரபுக்கள் இருவரும் ஆச்சரியம் அடைந்தனர். பையன் தங்களை ஏமாற்றி விட்டதாகவே அவர்கள் எண்ணினார்கள்.

அன்றிரவு சுமார் பத்துமணி இருக்கும். எட்டு வயதுடைய சிறுவன் ஒருவன் பிரபுக்கள் இருந்த இடத்திற்கு வந்தான். அவன் பிரபுக்களைப் பார்த்து, "நீங்கள் உங்களுக்குக் கொய்யாப்பழம் தந்த பையனிடம் ஒரு ரூபாய் கொடுத்தீர்களா?" என்று கேட்டான். அவர்கள் ஆச்சரியம் அடைந்து, "ஆம், நீ யார்?" என்றார்கள். சிறுவன், "ஐய!

நான் கொய்யாப்பழம் விற்றவனுடைய தம்பி. என் சகோதரன் உங்கள் பணத்தை மாற்றச் சென்றபோது மோட்டார் வண்டியில் அகப்பட்டுக் கொண்டான். அவனுடைய கால் முறிந்திருக்கிறது. அவனை வண்டியில் போட்டு எங்கள் வீட்டிற்குச் சிலர் கொண்டு வந்தனர். என் சகோதரன் தங்களிடம் பதினன்கணு கொடுக்கும்படி என்னை அனுப்பினன். தாமதம் உண்டானதால், அவனைத் தாங்கள் மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்,'' என்று கூறிப் பணத்தைத் தந்தான்.

பிரபுக்கள் இருவரும் சிறுவனுடைய நன்னடக்கைக்கு வியந்தனர். அவர்கள், வந்த சிறுவனோடு அவன் வீட்டை அடைந்து, காயம் பட்டுக்கிடக்கும் பையனைப் பார்த்தார்கள். அவர்கள் அவன் பக்கத்திலேயே இருந்து, அவனுக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்தார்கள். பையன் சில நாட்களில் சுகமடைந்தான். அநாதைச் சிறுவர்களான அவர்கள் இருவரையும் இரண்டு பிரபுக்களும் தங்கள் பிள்ளையைப் போலக் காப்பாற்றி வந்தார்கள். உண்மையுடையவர்களாய் நடந்துகொண்டால், உயர்வை அடையலாம் அல்லவா?

25. நாம் கடவுளின் மக்கள் அல்லவா ?

நைட்டிங்கேல் பறவை என்பது மேனுடுகளில் இருப்பது. அது வெகு அழகாய் இனிய குரல் எடுத்துப் பாடக் கூடியது. அதன் இனிய குரலோசையைக் கேட்டுக் கொண்டே வயல்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் களைப்பின்றி வேலை செய்வார்கள். அப்பறவை காலையில் பாட ஆரம்பித்துவிட்டால் மாலையில்தான் பாட்டை நிறுத்தும்.

இத்தகைய பறவை ஒன்று ஒரு கிராமத்தை அடுத்த சோலையில் இருந்தது. அது, ஒருநாள் காலை முதல் மாலைவரையில் விடாமல் பாடிக்கொண்டிருந்தது. மாலைப் பொழுதானதும் கதிரவன் மேற்கடலுள் ஆழ்ந்தான். எங்கும் இருள் கவிந்தது. இருட்டைக் கண்டதும் பறவை தன் பாட்டை நிறுத்தியது; தனக்குப் பசி அதிகமாயிருப்பதுபோல் உணர்ந்தது; அருகில் ஆகாரம் ஏதேனும் கிடைக்குமா என்று சுற்றிப் பார்த்தது. சிறிது தூரத்தில் சிறிய வெளிச்சம் ஒன்றைப் பறவை கண்டது; அவ் வெளிச்சத்தை உடைய பிராணி மின்மினிப் பூச்சி என்பதை உடனே அறிந்துகொண்டது; அதைத் தின்ன

லாம் என்று எண்ணி, அதனருகிற் பறந்து சென்றது.

நைட்டிங்கேல் பறவை தன்னை நோக்கி வந்த காரணத்தை உணர்ந்துகொண்ட மின்மினிப் பூச்சி, அதைப் பார்த்துக் கீழ் வருமாறு சொன்னது : "நண்பனே! நான் உனது இனிய பாட்டைக் கேட்டு மகிழ் வதுபோல, நீயும் எனது சிறிய வெளிச் சத்தைக் கண்டு களிப்பாய் என்று நம்பு கிறேன். உன்னைப் பாடும்படியாகக் கடவுள் செய்திருக்கிறார். அதே கடவுள் வெளிச் சத்தைத் தரும்படி என்னைப் படைத்திருக் கிறார். ஆகவே, நாம் இருவரும் ஒரே கடவு ளால் படைக்கப்பட்டவர்கள். எனவே, நாம் சகோதரர்களாவோம். அப்படியிருக்க, நீ எனக்குத் துன்பம் செய்ய விரும்பமாட் டாய் என்று நம்புகிறேன். நீ எனக்குத் துன்பம் செய்தாலும், நான் உனக்குத் துன் பம் செய்தாலும், நமது தந்தையாகிய கட வுள் நம்மைக் கோபிப்பார்.

"உலகத்தில் உள்ள ஓர் உயிரைக்கொல் ல மற்றோர் உயிர்க்கு உரிமை இல்லை. இவ் வுண்மையை நன்கு அறிந்தும், ஆறறிவு படைத்த மக்கள் ஆடு, மாடு, கோழி முத லிய பிராணிகளை வதைத்துத் தின்னுகிறார் கள். இதல்லாமல், ஒரு குற்றமும் செய்யாத

சிறிய உயிர்களையும் விளையாட்டாய்க் கொன்றுவிடுகிறார்கள். அவர்களைப் போன்ற மூடர்களாக நாமும் இருக்க வேண்டுமோ ?"

மின்மினிப் பூச்சி செய்த நீண்ட பிரசங்கத்தைக் கேட்ட பறவைக்கு நல்லறிவு வந்தது. அது, "அந்தோ! வீணாய் ஓர் உயிர்ப் பிராணியைக் கொல்லத் துணிந்தேனே!" என்று வருந்தி, அவ் விடத்தை விட்டு அகன்றது. மின்மினிப் பூச்சி, கடவுளை நினைத்துத் தன் வழியே சென்றது.

TB
O-13(5)
N32

85160

Kesari Printing Works, Madras.

১৩৯২/১০৫৫